பக்கங்கள் 27 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 21 புதன்கிழமை 04.02.2026 | அதிர்வு 187

## யாழ். பல்கலையில் ஏறிய கறுப்புக் கொடி



07

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# அரசின் அடக்குமுறைக்கு எதிராக எழுச்சி கொண்டது தமிழர் தாயகம்

## கிளிநொச்சியில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற கரிநாள் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் சுதந்திர தினமான இன்றைய தினத்தைத் தமிழர்களின் துயர்மிகுந்த கரிநாளாகப் பிரகடனப் படுத்தி, மாபெரும் எழுச்சிப் பேரணி கிளிநொச்சியில் ஒன்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் தொடரும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியினை நிலைநாட்டல் போன்ற விடயங்களை வலியுறுத்தியும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் 02





# அரசின் அடக்குமுறைக்கு எதிராக எழுச்சி கொண்டது தமிழர் தாயகம்

## கிளிநொச்சியில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற கரிநாள் போராட்டம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமான பேரணி டிப்போ சந்தி வரை சென்று, ஒருங்கிணைந்த சிவில் அமைப்புகளின் கரிநாள் பிரகடனத்துடன் நிறைவடைந்தது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், வடக்கு –கிழக்குக் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம், தாயகச் செயலணி, வடக்கு– கிழக்கு சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைந்த ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்குப் பூரண கதவடைப்பு மூலம் வடக்கு – கிழக்கு வர்த்தக சமூகம் பேராதரவை வழங்கியிருந்தது.

பேரணியில் ஈடுபட்டவர்கள் ”வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்”, ”வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்”, “ஸ்ரீலங்காவின் சுதந்திர நாள் தமிழர்களின் கரிநாள்” போன்ற கோஷங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறும், முழக்கங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில்

தொடர்ச்சி▼












# அரசின் அடக்குமுறைக்கு எதிராக எழுச்சி கொண்டது தமிழர் தாயகம்

## கிளிநொச்சியில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற “கரிநாள்” போராட்டம்

**தொடர்ச்சி▲**

எழுச்சிபூர்வமாகப் பங்கேற்றனர். இந்த பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், துரைராசா ரவிகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர் சமூகம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.
















# மட்டு. நகரில் கரிநாள் ஆர்ப்பாட்டப் பேரணியை தடுத்து நிறுத்திய பொலிஸாருடன் முறுகல்நிலை

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களபப்பில் சுதந்திர தினத்தை யிட்டு கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்காவரை இன்று புதன்கிழமை சென்ற கரிநாள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியை கோட்டமுனைப் பாலத்தில் வைத்து பொலிஸார் தடுத்து நிறுத்தியமையை அடுத்து பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்ட காரர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. பேரணியில் சென்றோர் அங்கு வீதியில் அமர்ந்திருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் காணா மல் போன உறுவுகள் சங்கம் பொது அமைப்புகள் கரிநாள் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

இதனையடுத்து மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இந்நாள், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் காணாமல் போண உறவுகள் மற்றும் அரசியல் வாதிகள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஒன்றிணைந்தனர்.

இதனைத் தொடர்ந்து "சிறிலங்காவின் சுதந்திர நாள் தமிழர்களின் கரிநாள் – தமிழர்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரி!" எனும் தொனிப் பொருளில் "காணாமல் போன உறவுகளுக்கு நீதி வேண்டும்", "வடக்கு – கிழக்கு தமிழர்க ளின் தாயகம்", "எமது மண் எமக்கு வேண்டும்" போன்ற அரசுக்கு எதிரான சுலோகங்கள் ஏந்தியவாறு, கோஷங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்ட ஊர்வலமாக காந்தி பூங்காவை நோக்கிச் சென்றனர்.

அச்சமயம் மட்டக்களப்பு நகர் பகுதி யில் உள்ள முக்கிய சந்திகளில் பொலி ஸார் மற்றும் கலகம் அடக்கும் பொலி ஸார் பலத்த பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். கோட்டமுனை பாலத்தில் வைத்து ஆர்ப்பாட்டகாரர்களை பொலி ஸார் வழிமறித்தனர். காந்தி பூங்காவிற்கு செல்ல முடியாது, அங்கு 78 வது சுதந்திர தின நிகழ்வு ஒன்று இடம்பெற்று வரு கின்றது என்றனர்

எனவே அங்கு இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட வாய்ப் புக்கள் இருக்கின்றது, எனவே அங்கு செல்ல முடியாது, நீங்கள் பிரதான பஸ்தரிப்பு நிலையம் சென்று ஆர்ப் பாட்டத்தை மேற்கொள்ளுமாறு பொலி ஸார் தெரிவித்து அவர்களை தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டகார்கள் "இல்லை, எங்களுக்கு சுதந்திரம் இருக்கின்றது, இந்த வீதியால் சென்று காந்தி பூங்கா முன்னாள் உள்ள மணிக் கூட்டுக் கோபுரம் சென்று, அங்கிருந்து பிரதான பஸ் நிலையம் பகுதிக்கு செல்ல வழிவிடுங்கள்" என்று பொலிஸாரின் தடுப்பை மீறிச் செல்ல முற்பட்டமையை அடுத்து பொலிஸாருக்கும் ஆர்பாட்ட கார்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து கலகம் அடக் கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு ஆர்ப் பாட்ட காரர்களை தடுத்து நிறுத்தினர். ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கு வீதியில் அமர்ந் திருந்து நண் பகல்12.00 மணிவரையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங் கிருந்து கலைந்து சென்றனர்.








# யாழ். மாவட்ட செயலகத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக முன்றலில் இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு அணிவகுப்பு மரியாதையுடன் ஆரம்பமாகி – தேசியக் கொடி ஏற்றல், தேசிய கீதம் இசைத்தல், சர்வ மதத் தலைவர்களின் ஆசியுரை மற்றும் அரச அதிபரின் உரை உள்ளடங்கலாக நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி, பரியோவான் கல்லூரி மற்றும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழுவின் அணிவகுப்பும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் தேசிய மாணவர் படையணியின் அணிவகுப்பும், சாரணர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பும் நடைபெற்றன.

மேலும், இன்றைய அணிவகுப்பில் பங்குபற்றிய மாணவர்களைக் கௌரவித்து மர நடுகை மற்றும் சிரமதானம் போன்ற நிகழ்வும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ராசிக், பொலிஸ், கடற்படை உள்ளிட்ட உயர் அதிகாரிகள், முப்படையின் அதிகாரிகள், மேலதிக அரச அதிபர், மேலதிக அரச அதிபர் (காணி) உள்ளிட்ட மாவட்ட செயலகப் பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது பசப்பு வார்த்தை

இலங்கையின் சுதந்திர தினத்தை ஒட்டி அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தமிழ் மக்களுக்குப் புதிய உபதேசம் ஒன்றைச் செய்திருக்கிறார்.

தமிழ் மக்களின் கடந்த கால அவல அனுபவங்களை மறந்தவராக - மறைத்தவராக - மறுத்தவராக - அவர் தத்துவம் பேசி இருக்கின்றமைதான் வேடிக்கையானது.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இடம் பெற்றது. இதன் போதே இந்தத் தத்துவங்களை அவர் உதிர்த்திருக்கின்றார்.


''தேசிய சுதந்திர தினம் என்பது நாட்டிலுள்ளசகலமக்களுக்குமானதுமான தினமாகும். இதில் எவ்வித இன, மத, மொழி பேதமும் இல்லை. எனினும் சில அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர். சுதந்திர தினத்தில் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும்.'' - என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல அவர் நடிப்புரை நிகழ்த்தியிருக்கின்றார்.

வெள்ளையர்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற இந்த 77 ஆண்டுகளில் தமிழர் தேசம் தனது கொடி உரிமை, குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை, நில உரிமை, தொழில் உரிமை, பண்பாட்டு உரிமை, மரபுரிமை, அடிப்படை மனித உரிமை என்று அனைத்தையும் - வாழ்வுரிமை வரை எல்லாவற்றையும் - தொலைத்து எமது தாயக மண்ணிலேயே வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்க்கப்பட்டிருக்கும் நிலைமையே இங்கு நீடிக்கின்றது. மறுபுறம் வேரடி மண்ணோடு பூமிப் பந்தெங்கனும் தூக்கி வீசப்பட்டுச்சின்னாபின்னப்படுத்தப் பட்டுக் கிடக்கின்றது தமிழினம்.

வாளேந்திய சிங்கக் கொடி தமிழர்களைஅடிமைப்படுத்தும் குறியீடு. அந்தக் கொடி உயர்வதைக் கண்டு பேருவகை அடைவதற்கு தமிழருக்கு ஏதுமில்லை. மாறாக, உள்ளக் குமுறலையும், விசனத்தையுமே அந்தக் கொடி ஏறுவது தமிழர் மனத்தில் ஏற்படுத்துகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழினத்துக்கும் தமிழர் தாயகத்துக்கும்எதிராகக்கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு இந்த அரசிலும் மோசமாகத் தொடர்கின்றது. அதன் அண்மைக்கால சாட்சியம்தான் - சான்றாதாரம்தான் - கிவுல் ஓயாத் திட்டம் என்ற நய வஞ்சக நகர்வு. மாகாணசபைத் தேர்தல் மறுப்பு போன்றவையும் கூட.

யுத்த காலத்தில் தமிழர் தேசம் மீது இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நீதி, நியாயமான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - விசாரணைகளை நடத்தி, உண்மை களைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்த இடமளிக்காமல், உண்மைகளை மூடி மறைத்து, தமிழர்களைத் தொடர்ந்து பேரவலத்துக்குள் ஆழ்த்தியபடி, தமிழர்களுக்கும் இந்த நாட்டில் உண்மைச் சுதந்திரம் கிட்டியிருக்கின்றமை போல அரசுப் பேச்சாளர் பசப்பு வார்த்தை பேசுகின்றமை அடிமுட்டாள் தனமாகும்.



# யாழ். பல்கலையில் ஏறிய கறுப்புக் கொடி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று பெப்ரவரி 4 ஆம் திகதி புதன்கிழமை சுதந்திர கரிநாள் கொடி ஏற்றப்பட்டது.

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினம் தமிழ் மக்களின் கரிநாள் என்பதை அரசுக்குக் கூறும் வகையிலேயே யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது.







# கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜெயரத்னவை நியமிக்க இணக்கம்

இலங்கையின் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு இதுவரை மூத்த துணை கணக்காய்வாளர் நாயகமாகப் பணியாற்றிய எல்.எஸ்.ஐ. ஜெயரத்னவை நியமிக்க அரசமைப்புக் கவுன்ஸில் நேற்று ஒருமனதாக ஒப்புதல் அளித்தது.

அரசியலமைப்புச் சபை நேற்று நண்பகல் 12.00 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் கூடியது.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்த பெயர்களை அரசமைப்புக் கவுன்ஸில் பரிசீலித்ததாக தெரிவிக்கப்பட்டது. அதன்படி, பல நாகள் நீண்ட விவாதத்திற்குப் பிறகு நேற்று புதிய கணக்காய்வாளர் நாயகம் நியமனம் குறித்த இறுதி முடிவு எடுக்கப்பட்டது.



முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து, ஏப்ரல் 8, 2025 முதல் கணக்காய்வாளர் நாயகப் பதவி காலியாக உள்ளது. அதைத் தொடர்ந்து, கணக்காய்வாளர் நாயகத் துறையின் மூத்த அதிகாரியான தர்ம பால கம்மன்பில, பதில் அடிப்படையில் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இருப்பினும், அவரது பதவிக்காலம் டிசம்பர் 5, 2025 அன்று முடிவடைந்தது.

ஜனாதிபதி இந்தப் பதவிக்கு முன்னர் பல பரிந்துரைகளைச் சமர்ப்பித்திருந்தாலும், அந்தப் பரிந்துரைகள் அரசமைப்புக் கவுன்ஸிலினால் நிராகரிக்கப்பட்டன. பின்னர் ஜனாதிபதி புதிய பரிந்துரைகளை அனுப்பினார். இது நேற்றைய இறுதி முடிவுக்கு வழி வகுத்தது.





# பருத்தித்துறை பிரதேச செயலத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகள்

இலங்கையின் 78 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இன்று வட மராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக முன்றலில் பிரதேச செயலர் ந.திரு லிங்கநாதன் தலைமையில் நடைபெற்றன.

காலை 8.04 மணியளவில் பிரதேச செயலரால் தேசியக் கொடி ஏற்றப் பட்டதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதேச செயலர் சுதந்திர தின உரையாற்றினார்.

மேலும் பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் அனைவரின் பங்கேற்புடன் புலோலி புற்றளையில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் சிரமதானப் பணிகளும், மரநடுகை நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், உதவிப் பிரதேச செயலர் ம.ப.தயானந்தன் உட்படப் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

















# இனவாதம், அடிப்படைவாதம் தலைதூக்க இடமளியோம்!

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி திட்டவட்டம்

"இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் மூலம் அழிவே ஏற்படுகின்றது. எனவே, இனவாதம் மற்றும் அடிப்படைவாதத்துக்கு நாம் இடமளிக்கமாட்டோம். தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவோம்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின விழா, சுதந்திர சதுக்க வளாகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்றது.

சுதந்திர தின உரையின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது.

எல்லா வளங்கள் இருந்தாலும் மனித வளம் மிக முக்கியம். எனவே, அறிவு, ஆற்றல் மற்றும் தொழில்நுட்பம் என எல்லா துறைகளிலும் மனித வளத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

எமது கல்வித்துறையில் பாரிய மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நாம் தயாராகி வருகின்றோம். இதற்கு மக்கள் ஆதரவு வழங்குவார்கள் என நம்புகின்றோம்.

ஒற்றுமையிலேயே மனித வளத்தின் வெற்றி தங்கியுள்ளது. நாம் பிளவுபட்டு நின்றால் ஒற்றுமையின் பலம் தெரியவராது.

இலங்கையில் இரு மொழிகள் உள்ளன. அடையாளம் மற்றும் கலாசார உரிமைகள் உள்ளன. எனவே, ஒவ்வொரு இன குழுமங்களினதும் அடையாளம், உரிமைகள் ஏற்கப்பட வேண்டும்.

இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் மூலம் அழிவே ஏற்படுகின்றது. எனவே, இனவாதம் மற்றும் அடிப்படைவாதத்துக்கு

தொடர்ச்சி▼

















# இனவாதம், அடிப்படைவாதம் தலைதூக்க இடமளியோம்!

**தொடர்ச்சி▲**

நாம் இடமளிக்கமாட்டோம். தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவோம்." – என்றார்.

மகா சங்கத்தினர் உள்ளிட்ட மதத் தலைவர்கள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன, ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச அதிகாரிகள், முப்படைத் தளபதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.























## வவுனியாவில் சுதந்திர தினத்தையொட்டி
# வாகனப் பேரணியும் நடை பவனியும்

(கி.வசந்தன்)

78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கில் இன ஒற்றுமையை பிரதிபலிக்கும் நோக்குடன் வாகனப் பேரணியும் நடைபவனியும் வவுனியாவில் இன்று (04.01) இடம்பெற்றது.

வன்னி மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வானது வவுனியா புதிய பேருந்து நிலையப் பகுதியில் ஆரம்பமாகி வைத்தியசாலை சுற்றுவட்டம் ஊடாக பசார் வீதியை அடைந்து,

அங்கிருந்து கண்டி வீதி வழியாக சென்று வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்றலில் நிறைவடைந்தது.

இதன்போது தேசியக் கொடியை ஏந்தியவாறு வாகனங்கள் பேரணியாக சென்றதுடன், இனங்களின் கலாச்சாரங்களையும் பிரதிபலிக்கக்கூடிய நடைபவனியும் இடம்பெற்றது.

நிகழ்வில் வன்னி மக்கள் ஒன்றியத்தை சேர்ந்தவர்கள், சிவசேனை அமைப்பினர், மத குருமார்கள், பொது அமைப்பினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.













# முடங்கியது முல்லைத்தீவு!

## மல்லாவியில் பூரண ஹர்த்தால்

நாட்டின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்று கரிநாள் போராட்டங்கள் இடம் பெற்றன.

அதேநேரம் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் முல் லைத்தீவு – மல்லாவி நகரில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டி ருந்ததுடன், வர்த்தக நிலையங்கள் முன்பாக கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.


















# வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று எளிமையாக நடந்த சுதந்திர தின நிகழ்வு

(கி.வசந்தன்)

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று எளிமையாக நடைபெற்றது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன் உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மதகுருமார் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தமிழ், சிங்களம் என இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு சுதந்திர தினம் எளிமையாக நடைபெற்றது.



















# வவுனியாவில் சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று பறக்கவிடப்பட்ட சமாதானப் புறாக்கள்

**(கி.வசந்தன்)**

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சமாதானப் புறாக்கள் பறக்க விடப்பட்ட துடன், தேசியக் கொடி தாங்கிய பலூன்களும் பறக்கவிடப்பட்டன.

நல்லிணக்கத்துக்கான இளைஞர் அணியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகர சபை மைதானத்தில் இன்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக மூவின மாணவர்கள், இளைஞர், யுவதிகள் ஊர்வலமாக மாநகர சபை மைதானத்துக்கு வருகை தந்திருந் ததுடன், மூவின மாணவர்களும் இணைந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சாமாதனப் புறாக்கள் பறக்கவிடப்பட்டதுடன், தேசியக் கொடி தாங்கிய பலூன்களும் பறக்க விடப்பட்டன. அத்துடன் கலந்துகொண்ட மூவின மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப் பட்டன.

இந்த நிழ்வில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், மதகுருமார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.






















# 78ஆவது சுதந்திர தினத்தையொட்டி மயூரபதி ஆலயத்தில் விசேட பூஜை

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாட்டில் வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நாட்டுக்காக விசேட பூஜை வழிபாடு சிவஸ்ரீ உதயராகவ குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், திணைக் களப் பணிப்பாளர் ய.அனிருத்தனன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்












# சுதந்திர தினம் எம் கரிநாளே!

## வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம்

**(கி.வசந்தன்)**

இலங்கை அரசு சுதந்திர தினமாகக் கொண்டாடும் இந்த நாளை, காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்கள் கரிநாள் என நினைவு கூருகின்றோம் எனத் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் இன்று அவர்களது போராட்டப் பந்தலில் முன்னெடுத்த ஆர்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“1948 ஆம் ஆண்டு கிடைத்த சுதந்திரம் எங்களுக்கு விடுதலையாக அமையவில்லை. அது எங்கள் குழந்தைகள் காணாமல் ஆக்கும் ஒரு நீண்ட, இருண்ட பாதையின் தொடக்கமாக மாறியது. நாங்கள் அரசியல்வாதிகள் அல்லர். நாங்கள் சட்ட நிபுணர்கள் அல்லர். நாங்கள் தாய்மார்கள். எங்கள் குழந்தைகளைப் பெற்றவர்கள்.

அவர்களை வளர்த்தவர்கள். அவர்களை இழந்தவர்கள். வவுனியா நகரில், இந்த வன்னிப் பந்தலில் 3 ஆயிரத்து 271 நாட்களாக நாங்கள் அமர்ந்திருக்கின்றோம். மழையிலும், வெயிலிலும், அரசுகள் மாறினாலும், வாக்குறுதிகள் மாறினாலும், எங்கள் கேள்வி மட்டும் மாறவில்லை. 1948 இல், இலங்கை சுதந்திரம் பெற்றது.

ஆனால் அந்தச் சுதந்திரம் எங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவில்லை. எங்கள் மொழியை மதிக்கவில்லை. எங்கள் நிலங்களைக் காக்கவில்லை. எங்கள் குழந்தைகளை எங்களிடம் திருப்பித் தரவில்லை.

இந்த அநீதியின் வேர்கள், சோல்பரி கமிஷன் உருவாக்கிய அரசியல் அமைப்பிலேயே உள்ளன. இங்கிலாந்து இலங்கையிலிருந்து அவசரமாக வெளியேறி, பெரும்பான்மை ஆட்சியை ஜனநாயகமாக்கி, தமிழர்களை பாதுகாப்பு அற்றவர்களாக விட்டுச் சென்றது.

காலனித்துவத்திற்கு முன்பு, தமிழர்களுக்கு தங்கள் சொந்த அரசியல் அதிகாரம் இருந்தது. தங்கள் சொந்த நிலமும் நிர்வாகமும் இருந்தது. இந்த உண்மை அரசமைப்பில் சொல்லப்படவில்லை. இது சொல்லப்படாத உண்மை.

பின்னர் எங்கள் குழந்தைகள் காணாமல் ஆக்கப்படுவதற்கு ஒரு சட்டபூர்வ அநீதியாக மாறியது. அந்தத் தவறுகளின் விலையையே இன்று நாங்கள் இந்தப் பந்தலில் எங்கள் கண்ணீரோடு செலுத்துகின்றோம்.

எங்கள் கேள்வி எளிமையானது. எங்கள் குழந்தைகள் எங்கே? அவர்கள் எங்கே? யார் பொறுப்பு? எப்போது நீதி? கரி நாள் எங்களுக்கு ஒரு சடங்கு நாள் அல்ல. அது ஒரு நினைவூட்டல். சுதந்திரம் எங்களுக்கு கிடைக்கும் நாள், எங்கள் குழந்தைகளின் உண்மை வெளிவரும் நாளே. இது சுதந்திர தினம் அல்ல. இது எங்கள் குழந்தைகள் காணாமல் ஆக்கப்பட்ட கரிநாள்.” - என்றனர்.


















# சக்கர நாற்காலியில் இலங்கை முழுவதும் சுற்றுப்பயணம் செய்துவரும் இளைஞன்!

## முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை வந்தடைந்தார்

(பா.சதீசன்)

மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள், சமூக ஒற்றுமை மற்றும் மனிதாபிமான நன்றியை வலியுறுத்தும் நோக்குடன் சக்கர நாற்காலியின் உதவியுடன் இலங்கை முழுவதும் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்த இளைஞன், நேற்று முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பை வந்தடைந்துள்ளார்.

வவுனியா, சூடுவந்தபுலவு பகுதியை சேர்ந்த மாற்றாற்றல் கொண்ட இளைஞரான மக்கின் முகமது அலி என்பவர், கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி காலை மன்னாரில் இருந்து தனது இந்த விசேட சுற்றுப் பயணத்தை ஆரம்பித்திருந்தார். மன்னார் பஜார் பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு முன்பாக இருந்து அவர் தனது பயணத்தை ஆரம்பித்திருந்தார்.

இலங்கை நாட்டின் 79 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டிய அவசியம், குறிப்பாக படித்த மாற்றுத் திறனாளிகள் வேலை வாய்ப்புகள் இன்றி முடங்கியுள்ள நிலை குறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அண்மைக்கால அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு நாடுகள் மற்றும் புலம்பெயர் உறவுகள் மனிதாபிமான உதவிகளை வழங்கியிருந்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ளும் வகையிலும், அனர்த்த காலங்களில் இன, மத, மொழி வேறுபாடுகளின்றி இலங்கை மக்கள் ஒருவருக்கொருவர் உதவியுள்ள ஒற்றுமையையும் சமூக நல்லெண்ணத்தையும் எடுத்துரைக்கும் நோக்கிலும் இந்த பயணம் முன்னெடுக்கப்படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

வடமாகாண சக்கர நாற்காலி கிரிக்கெட் அணியின் தலைவராக செயல்பட்டுவரும் மக்கின் முகமது அலி, கடந்த காலங்களிலும் பல்வேறு சமூக செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை வந்தடைந்த அவருக்கு அப்பகுதி மக்கள் இன, மத பேதமின்றி தாமாக முன்வந்து அமோக ஆதரவை வழங்கியிருந்தனர்.பொது மக்களின் இந்த அன்பும் ஊக்கமும் தன்னை மேலும் உற்சாகப்படுத்தியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்த அவர், சக்கர நாற்காலி சுற்றுப் பயணம் ஆரம்பித்த இடமான மன்னாரில் இன்னும் ஒரு சில தினங்களில் தனது பயணத்தை நிறைவு செய்யவுள்ளார் என்று தெரிவித்தார்.



# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் வெள்ளியன்று இரத்ததானம்!

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமைவாக பருத்தித்துறையில் உள்ள 521 ஆம் படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்த தான முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் இந்த இரத்ததான நிகழ்வுக்கு இரத்ததானம் செய்ய ஆர்வம் உள்ள அனைவரையும் கலந்த கொள்ளுமாறு இராணுவ மேஜர் டி.பி. விஜயசிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.



# எங்களுக்கு சுதந்திரம் இல்லை என்று கூறிய மஸ்கெலியா லங்கா தோட்ட தொழிலாளர்கள்!

## சுதந்திர தினமான இன்று கறுப்புக் கொடிகள் ஏந்திக் கோஷம்

**(மஸ்கெலியா நிருபர்)**

எங்களுக்கு சுதந்திரம் இல்லை என்று கூறிய மஸ்கெலியா லங்கா தோட்ட தொழிலாளர்கள் சுதந்திர தினமான இன்று காலை கறுப்புக் கொடிகள் ஏந்திக் கோஷமிட்டனர்.

203 வருடங்களாக மஸ்கெலியா கிலன்டில் தோட்ட லங்கா பிரிவில் வசிக்கும் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இன்று காலை 11.30 மணிக்கு கருப்பு நிற கொடிகள் மற்றும் பதாதைகள் ஏந்திய வண்ணம் தோட்ட பிரிவில் இருந்து கோஷம் எழுப்பிய வண்ணம் சாமி மலை ஹேட்டன் பிரதான வீதியில் ஒன்று கூடினர்.

சுமார் 5 கிலோ மீற்றர் வீதியை கடந்த 203 ஆண்டுகளாக தோட்ட நிர்வாகமோ மாறி மாறி வந்த ஆட்சியாளர்களோ எம்மால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ கடந்த காலங்களில் இருந்த மாகாண சபை உறுப்பினர்களோ அல்லது பிரதேச சபையின் உறுப்பினர்களோ செப்பனிடவில்லை.

கடந்த ஆட்சி காலத்தில் முன்னால் அமைச்சர் மற்றும் முன்னாள் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் இணைந்து இந்த வீதியைச் செப்பனிட அடிக்கல் நட்ட போதும் வீதி செப்பனிடவில்லை.

நோயாளிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை இந்த வழியாகக் கொண்டு செல்ல தொட்டில் கட்டி தூக்கிச் செல்ல வேண்டி உள்ளது. 1990 நோயாளர் காவு வண்டி பிரதான வீதியில் வந்து நின்று விடும். சுமார் 3.5 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து தொட்டில் கட்டி தூக்கி வந்து நோயாளர் காவு வண்டியில் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு கொண்டு வரும் வேளையில் பலர் உயிரிழந்துமுள்ளனர். சில கர்ப்பிணி பெண்களுக்கு பிரசவம் இடைநடுவில் ஏற்பட்டுமுள்ளது.

கடந்த மாதம் பாடசாலை மாணவர்கள் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

நாடு 78 சுதந்திர தினத்தை கொண்டாடும் வேளையில் எமக்கு சுதந்திரம் இல்லை.

நாட்டின் இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன் வந்து எமது தோட்ட வீதியை செப்பனிட உடன் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை முன் வைத்து இன்று காலை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# பதுளையில் பிரபல உணவகத்தில் இன்று காலை திடீர் தீ விபத்து!



**(நடராஜா மலர்வேந்தன்)**

பதுளை நகரிலுள்ள பிரபல உணவக கட்டடமொன்றில் இன்று காலை திடிரென ஏற்பட்ட தீ விபத்தில் உணவம் எரிந்து நாசமாகியது.

பதுளை மாநகர தீயணைப்புப் படையினரின் கடும் முயற்சியால் தீப்பற்றல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டப் போதிலும் உணவகத்தில் இருந்த உணவு பண்டங்கள், ஏனைய உணவக அத்தியாவசிய பொருள்களும் தீக்கிரையாகியுள்ளன.

குறித்த சந்தர்ப்பத்தில் உணவகத்திலிருந்து வெளியேற முடியாமல் புகை மண்டலத்தால் மூச்சு திணறலுக்குள்ளாகி காயங்களுக்குள்ளாகிய இரண்டு பேர் பதுளை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

குறித்த தீ விபத்து சம்பவம் தொடர்பாக பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஆரையம்பதி சுகாதார பிரிவில் தொழுநோய் சிகிச்சை நிலையம்

**(மட்டக்களப்பு நிருபர்)**

ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொழுநோய் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொழுநோய் சிகிச்சை நிலையத்தை சுதாதார அமைச்சின் பிரத்திப் பணிப்பாளர் நாயகம் எஸ்.மகேந்திர ஆலோட்டால் இன்று புதன்கிழமை திறந்து வைத்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தோல் சிகிச்சை வைத்திய நிபுணர் ரி.தமிழ்வண்ணன், தொழுநோய் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் லிபோஜிதா மற்றும் ஏனைய பொறுப்பு வைத்தியர்கள், தாதியர்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் நோயாளர் நலன் கருதி வாழைச்சேனை பிரதேசத்திலும் இவ்வாறான சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கபடவுள்ளது.



இது ஒரு தொற்று நோயாகும். நீண்ட காலம் இந்த மாவட்டத்தில் இருந்து வருகின்றது. இதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வரப்படுகின்றது. நோயாளர்களின் நலன் கருதி ஆரையம்பதியிலும் இதற்கு உரிய சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நோய்க்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை வழங்கினால் கட்டுப்படுத்த முடியும். இல்லாது விட்டால் அது நரம்புகளையும், தோலையும் பாதிக்கும். நோய் அறிகுறியை அவதானித்தவுடன் சிகிச்சை பெற்றால் குணமாக்க முடியும் என இதன்போது வைத்தியர்கள் தெரிவித்தனர்.



# சுதந்திர தின நிகழ்வுகள்...

## மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் ...





**(மட்டக்களப்பு நிருபர்)**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வின் மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளர் கி.இளம்குமுதன் தலைமையில் இடம்பெற்றன. இதன்போது உதவி பிரதேச செயலா ளரினால் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடி உயிர் நீர்த் தவர்களுக்காக இரு நிமிட மௌன அஞ்சலியும் செய்யப்பட்டது.

## கிளிநொச்சியில் சுதந்திர தின நிகழ்வு...



**(பூ.லின்ரன்)**

கிளிநொச்சியில் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு வடமாகாண மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



# மஸ்கெலியா பிரதேச சபையில்...





**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று மஸ்கெலியா பிரதேச சபையில் தவிசாளர் கந்தையா இராஜ்குமார் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா இராஜ்குமார் தேசிய கொடியை ஏற்றினார்.

நிகழ்வில் பிரதேச சபையின் உறுப்பினர்கள், அதிகாரிகள் அதன் செயலாளர் மற்றும் சிறுவர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# கொழும்பு ஜாவத்தை பள்ளிவாசலில்...



**(அஷ்ரப் ஏ. சமத்)**

இலங்கையின் 78 ஆவது சுதந்திர நிகழ்வின் முஸ்லிம் சமய நிகழ்வுகள் இன்று கொழும்பு 7 இல் உள்ள ஜாவத்தை பள்ளிவாசலில் நடைபெற்றது. இந்த நிகழ்வை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையினர் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதியமைச்சர் முனீல் முளபா, கொழும்பு மாநகர சபை முதல்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பள்ளிவாசல்முன்றலில் தேசியக் கொடியை பிரதியமைச்சர் ஏற்றி வைத்தார்.



# தோப்பூர் அல்தாஜ் மகா வித்தியில்...





(எம்.எம்.நௌபீக், தோப்பூர்)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு தோப்பூர் அல்தாஜ் மகா வித்தியாலயத்தில் அதிபர் முகம்மது முகைதீன் நௌபீக் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்தியில்...



(எம்.ஏ.றமீஸ்)

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. ஆதிபர் ஏ.எல்.நசீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது பிரதி அதிபர் எம்.ஏ.சலாகுதீன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளரும் மாநகர சபை உறுப்பினருமான சபூர் ஆதம் உள்ளிட்ட பாடசாலையின் ஆளணியினர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் சுதந்திர தின நிகழ்வு...




(எம்.ஏ.றமீஸ்)

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு அட்டாளைச் சேனை டோரியன் நண்பர்கள் அமைப் பால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு அமைப்பின் தலைவர் எம்.ஏ.சி.எம். உனைஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நிகழ்வின் பிரதம அதிதி யாக ஓய்வு நிலை ஆசிரியை எம்.ஐ.மதீனா கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து சுதந்திர தின நிகழ்வின் நினைவாக அட்டா ளைச்சேனை பிரதான வீதியோரங்களில் பல்வேறு பயன் தரும் மரக்கன்றுகள் அதிதிகளால் நட்டு வைக்கப்பட்டன.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தில்...





(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 78 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வானது இன்று திருகோ ணமலை மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நடைபெற்றது.

தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்த முப்படை வீரர்களை நினைவு கூறும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# பா.ஜ.க. அரசை கண்டித்து நாளை நடைபயணம்

## செல்வப்பெருந்தகை அறிவிப்பு



பா.ஜ.க அரசை கண்டித்து நாளை நடைபயணம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் செல்வப்பெருந்தகை வெளியிட்ட அறிக்கையில்,

ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை சிதைக்கும் நோக்கத்தோடு செயல்படும் பா.ஜ.க. அரசைகண்டித்து, அகில இந்திய காங்கிரஸ் கொமிட்டியின் அறிவுறுத் தலின் படி தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, நாளை மதியம் 2 மணியளவில் எனது தலைமையில் சென்னை, திருவள்ளூர், ஆவடி, செங்கல்பட்டு, காஞ்சி மாவட்ட காங்கிரஸ் கொமிட்டி தலைவர்கள் முன்னிலையில் நடைபயணம், கிழக்கு தாம்பரம் - பாரத மாதா தெரு, வேளச்சேரி வீதி சந்திப்பில் அமைந்துள்ள காமராஜர் சிலை அருகிலிருந்து, மேற்கு தாம்பரம் - சண்முகம் சாலை வரை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதேபோன்று, பெப்ரவரி 7 ஆம் திகதி திருச்சியிலும், 8 ஆம் திகதி திண்டுக்கல்லிலும், 9 ஆம் திகதி தென்காசியிலும், 12 ஆம் திகதி கோவையிலும் நடைபயணம் நடைபெறும்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# 65 தொகுதிகள் கேட்கும் பா.ஜ.க; 25 வழங்க திட்டமிடும் அ.தி.மு.க

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் 65 தொகுதிகள் கேட்கும் பா.ஜ.கவுக்கு 25 தொகுதிகள் கொடுத்து சமாதானப்படுத்த அ.தி.மு.க. திட்டமிடுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. 20 தொகுதிகளில் போட்டியிட்டது. இதில் 4 இல் வெற்றி பெற்றது. மீதம் உள்ள 16 இல் பா.ஜ.கவுக்கு இரண்டாமிடம் கிடைத்தது. அடுத்து, மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. விலகிய நிலையில் பா.ஜ.க. 23 தொகுதிகளில் போட்டியிட்டது. இதில் 12 தொகுதிகளில் இரண்டாமிடம் பெற்ற கட்சிக்கு, சட்டப்பேரவை தொகுதி வாரியான வாக்குகளில் 59 தொகுதிகளில் இரண்டாவது, 64 இல் மூன்றாவது இடம் கிடைத்தது.

இவற்றை முன்னிறுத்தி பா.ஜ.கவின் தேசியத் தலைமை அ.தி.மு.க.விடம் 65 தொகுதிகள் கேட்டுள்ளது. இதற்கு வலுவானக் காரணமான தமிழகத்தில் பா.ஜ.க. வளர்ந்து வருவதாக கட்சித் தலைமை குறிப்பிட்டுள்ளது. உதாரணமாக, சமீபத்தில் பிரதமர் மோடியின் மதுராந்தகம் கூட்டத்துக்கும் சுமார் 5 லட்சம் பேர் வந்தனர் என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் பா.ஜ.கவினர் மட்டுமே சுமார் 3 லட்சம் என்பது தங்கள் கட்சியின் அபரிமிதமான வளர்ச்சியை காட்டுவதாக தலைமை வாதிடுகிறது.

இதுகுறித்து தேசிய பா.ஜ.க. வட்டாரம் கூறுகையில், "எங்களிடம் நட்புரீதியாகப் பேசும் அ.தி.மு.க. முக்கியத் தலைவர்கள் மூலம் தகவல் பரிமாறப்படுகிறது. இதில் கடந்த தேர்தலை விட சற்று அதிகமாக 25 தொதிகளை ஒதுக்க அ.தி.மு.க. விரும்புவதாகக் தெரிகிறது. ஆனால், குறைந்தது 35 முதல் 45 வரை அளிக்க அ.தி.மு.கவிடம் பா.ஜ.க. வலியுறுத்துகிறது. இதற்கு கடந்த தேர்தலில் பா.ஜ.க. நியமித்த வாக்குச்சாவடி முகவர்கள் எண்ணிக்கை நாங்கள் சுட்டிக் காட்டியுள்ளோம்." என்று தெரிவித்தனர்.



# பரஸ்பர வர்த்தக வாய்ப்புகள் தொடர்பில் அமெ. அமைச்சர்கள் - ஜெய்சங்கர் சந்திப்பு

இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட், வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ ஆகியோரை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இரு நாடுகளிலும் உள்ள வர்த்தக வாய்ப்புகளை, பரஸ்பரம் சிறப்பாக பயன்படுத்திக் கொள்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிலையில், அமெரிக்கா சென்றுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட் மற்றும் வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ ஆகியோரை தனித்தனியே சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஸ்காட் பெசன்ட் உடனான சந்திப்பு குறித்து ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"வொஷிங்டன் டி.சி.யில் அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட்டை சந்தித்ததில் மகிழ்ச்சி. இந்திய - அமெரிக்க பொருளாதார கூட்டாண்மை மற்றும் மூலோபாய ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து நாங்கள் விவாதித்தோம். இந்த விவாதம் பயனுள்ளதாக இருந்தது." என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து ஸ்காட் பெசென்ட் வெளியிட்டுள்ள பதிவில்,

"இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பு மிகவும் மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. எங்கள் பேச்சுவார்த்தையின்போது விநியோகச் சங்கிலிகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும், பரஸ்பர நலன்கள் சார்ந்த தேசிய மற்றும் பொருளாதார விஷயங்கள் குறித்து நாங்கள் விவாதித்தோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# முஅம்மர் கடாபியின் மகன் லிபியாவில் சுட்டுக்கொலை

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முஅம்மர் கடாபியின் மகனும், ஒரு காலத்தில் அவரது அரசியல் வாரிசாகக் கருதப்பட்டவருமான சைஃப் அல்-இஸ்லாம் கடாபி (வயது 53), நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை அவரது அரசியல் குழுவின் தலைவர் மற்றும் லிபிய செய்தி நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளன.

லிபியாவின் மேற்குப் பகுதியில் உள்ள ஜிந்தான் நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நான்கு பேர் கொண்ட ஆயுதமேந்திய கும்பல் ஒன்று அவரது வீட்டிற்குள் புகுந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு முன்னதாக அந்த வீட்டிலிருந்த கண்காணிப்பு கமராக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன எனக் கூறப்படுகிறது.

அதேசமயம், அவர் அல்ஜீரியா எல்லையோரம் கொல்லப்பட்டார் என அவரது சகோதரி தெரிவித்துள்ளார். எனினும், ஜிந்தான் நகரில் நடந்த



மோதலில் அவர் உயிரிழந்தார் என பெரும்பாலான தகவல்கள் தெரிவிக்கின்றன.

1972 ஆம் ஆண்டு பிறந்த சைஃப் அல்-இஸ்லாம், தனது தந்தை முஅம்மர் கடாபியின் 42 ஆண்டு கால ஆட்சியில் மிகவும் செல்வாக்கு மிக்க நபராகத் திகழ்ந்தார்.

லண்டன் ஸ்கூல் ஒஃப் எகனாமிக்ஸில் பயின்ற இவர், ஆரம்பகாலத்தில் லிபியாவை நவீனமயமாக்க விரும்பும் ஒரு சீர்திருத்தவாதியாக மேற்கத்திய நாடுகளால் பார்க்கப்பட்டார்.

2011 ஆம் ஆண்டில் நேட்டோ ஆதரவுடன் நடந்த கிளர்ச்சியின் போது, போராட்டக்காரர்களை ஒடுக்கினார் டின இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. கிளர்ச்சியின் முடிவில் இவரது தந்தை கொல்லப்பட்ட பிறகு, சைஃப் அல்-இஸ்லாம் ஜிந்தான் நகரில் பிடிபட்டு சுமார் ஆறு ஆண்டுகள் சிறையில் வைக்கப்பட்டார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இவரைத் தேடி வந்தது. 2015 ஆம் ஆண்டு திரிபோலி நீதிமன்றம் இவருக்கு மரண தண்டனை விதித்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

2021 ஆம் ஆண்டு லிபிய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போகிறார் என அறிவித்த சைஃப் அல்-இஸ்லாம், நீண்ட இடைவேளைக்குப் பிறகு மீண்டும் அரசியலில் நுழைய முயன்றார். ஆனால், பல்வேறு காரணங்களால் அந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது அவரது மறைவு, ஏற்கனவே ஆயுதமேந்திய குழுக்களால் பிளவுபட்டுள்ள லிபியாவில் மேலும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது குறித்து லிபிய அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.



# மசகு எண்ணெய்க்கான 500 மில்லியன் டொலரை வெனிசுவேலாவிடம் ஒப்படைத்தது அமெரிக்கா

கடந்த மாதம் கராகஸ் மற்றும் வொஷிங்டன் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, முதற்கட்டமாக மேற்கொள்ளப்படட மசகு எண்ணெய் விற்பனையில் இருந்து மொத்தமாக பெறப்பட்ட 500 மில்லியன் டொலர்களை அமெரிக்கா தற்போது வெனிசுவேலா அரசாங்கத்துக்கு அனுப்பி உள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, எண்ணெய் விற்பனை மூலம் கிடைத்த தொகையில் எஞ்சியிருந்த கடைசி 200 மில்லியன் டொலர் தற்போது வெனிசுவேலாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 3ஆம் திகதி அமெரிக்க இராணுவ நடவடிக்கையின் போது வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ பிடிபட்டமையைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே இந்த முக்கிய உடன்படிக்கை எட்டப்பட்டது.

வெனிசுவேலாவில் நிலவிய நீண்டகால அரசியல் நெருக்கடிக்கு மத்தியில், ஜனாதிபதி மதுரோ பிடிபட்ட சம்பவம் ஒரு பெரிய திருப்பமாக அமைந்தது. அதன் பின்னரே இரு நாடுகளுக்கும் இடையிலான எண்ணெய் வர்த்தகம் மற்றும் z முடக்கங்களை நீக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது இந்த 500 மில்லியன் டொலர்நிதிவிடுவிக்கப்பட்டமையானது, இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டு வரும் புதிய இராஜதந்திர உறவுகளின் ஒரு அங்கமாகப் பார்க்கப்படுகிறது.

எனினும், இந்த நிதியானது அந்நாட்டின் பொருளாதார மீட்சிக்கு எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது குறித்து தற்போதைய வெனிசுவேலா நிர்வாகம் இன்னும் விரிவான தகவல்களை வெளியிடவில்லை.

# மணிப்பூர் முதல்வராகிறார் யும்நம் கேம்சந்த் சிங்; முடிவுக்கு வருகின்றது குடியரசுத் தலைவர் ஆட்சி

மணிப்பூரில் இரண்டாவது முறையாக நீடிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சி விரைவில் முடிவுக்கு வரவுள்ள நிலையில், அந்த நிலத்தின் புதிய முதல்வராக பா.ஜ.கவின் யும்நம் கேம்சந்த் சிங் பதவியேற்க உள்ளார்.

மணிப்பூரில் கடந்த 2023 மே மாதம் மைதேயி, குகி சமூகத்தினர் இடையே இனக் கலவரம் மூண்டது. இதில் 260 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்தனர். பல மாதங்களாக வன்முறை நீடித்ததால் கடந்த 2025 பெப்ரவரியில் பா.ஜ.கவை சேர்ந்த முதல்வர் பிரேன் சிங் பதவி விலகினார்.

இதையடுத்து மணிப்பூர் சட்டப்பேரவை முடக்கி வைக்கப்பட்டு, அம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. பிறகு இது மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி பெப்ரவரி 12 ஆம் திகதி முடிவுக்கு வருகிறது.



இந்த நிலையில், டில்லியில் உள்ள பா.ஜ.க. தலைமையகத்தில் மணிப்பூர் பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட இருவர் தவிர மற்ற அனைத்து எம்.எல்.ஏக்களும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மணிப்பூர் பா.ஜ.க. சட்டப்பேரவை கட்சி தலைவராக முன்னாள் அமைச்சர் யும்நம் கேம்சந்த் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார். விரைவில் இவர் மணிப்பூர் முதல்வராக பதவியேற்க உள்ளார். துணை முதல்வராக குகி சமூகத்தை சேர்ந்த முன்னாள் பெண் அமைச்சரான நெம்சா கிப்கென் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


கனடா முரசு

புதன்கிழமை 04/02/2026

## கனடாவில் பொலிஸாருக்கு எதிராக 400 இற்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகள்

2024 ஆம் ஆண்டில் கனடாவின் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மீது ஒழுக்கக்கேடு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

02▶




# ரஷ்யாவிற்கான விசாவை நிறுத்தியது கனடா அரசு

ரஷ்யாவில் உள்ள தனது செயலாக்க மையங்களில் விசா வழங்குவதை கனடா நிறுத்திவிட்டதாக அரசாங்க செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கனேடிய அரசு ரஷ்யாவில் தனது குடிவரவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அல்லாமல், செலவுகளைக் குறைத்து செயல்பாடுகளை நவீனமயமாக்குவதற்கான அரசாங்க முயற்சியை எடுத்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக, கடந்த மாதம் ரஷ்யாவில் உள்ள தனது செயலாக்க மையங்களில் விசா வழங்குவதை நிறுத்திவிட்டதாக கனடா கூறியுள்ளதாக, அதன் அரசாங்க செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

02▶




# ட்ரூடோ கேற்றி பெர்ரி ஜோடி தொடர்பில் வெளியாகிவரும் போலி புகைப்படங்கள்

கனடா முன்னாள் பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது காதலியான பிரபல அமெரிக்கப் பாடகி கேற்றி பெர்ரி ஜோடியின் புகைப்படங்கள் சமீபத்தில் சில ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளியாகின.

அந்த புகைப்படங்கள் வெளியானாலும் ஆகின, ஒரு நிகழ்ச்சி விடாமல் எல்லா நிகழ்ச்சிகளிலும் அவர்கள் இருவரும் இணைந்து ஜோடியாக பங்கேற்பதுபோல் ஒரு தோற்றம் முன்வைக்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில்,இசைக்கலைஞர்களை

# கனடிய பிரதமர் மார்க் கார்னியை எதிர்க்கட்சித் தலைவர் சந்திக்கிறார்

கனடா பிரதமர் மார்க் கார்னி மற்றும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லியெவ்ரே ஆகியோர் இந்த வாரம் சந்திக்க உள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு தொடங்கியுள்ள நிலையில் இந்த சந்திப்பு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட காணொலியில், பிரதமரை அவசரமாக சந்திக்க விரும்புவதாக பொய்லியெவ்ரே தெரிவித்துள்ளார்.

"நடைமுறை தீர்வுகளை முன்வைக்கவும், பிற கருத்துகளை கேட்கும் மனப்பான்மையுடன் இணைந்து செயல்பட்டு விரைவான முடிவுகளை எட்டவும் இந்த சந்திப்பு அவசியம்," என அவர் கூறியுள்ளார்.

மேலும், அமெரிக்காவின் சுங்க வரிகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயல்படவும், அமெரிக்காவுடன் சுங்க வரியில்லா வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்தவும் கன்சர்வேட்டிவ் கட்சி



தயாராக இருப்பதாகவும் பொய்லியெவ்ரே தெரிவித்தார்.

ஜனவரி இறுதியில் பிரதமர் கார்னிக்கு திறந்த கடிதம் ஒன்றை எழுதிய பொய்லியெவ்ரே, நீண்ட காலமாக தாமதிக்கப்பட்ட கொள்கைகளை விரைவாக நடைமுறைப்படுத்த தனது கட்சியின் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால், அந்தக் கடிதத்திற்கு இது வரை பதில் வரவில்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

---

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் விளைவாக, குறைந்தது 20 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டதோடு, சிலர் இராஜினாமா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளனர்.

2024 ஆண்டில் மொத்தம் 443 ஒழுக்கக்கேடு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் 408 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த வழக்குகளில் சுமார் நான்கில் ஒரு பகுதி கடுமையான ஒழுக்க நடவடிக்கைகளாக முடிவ



டைந்துள்ளன.

அதில் பதவி உயர்வுக்கு தகுதியற்றவர்களாக அறிவிக்கப்படுதல் அல்லது 80 மணி நேரத்திற்கும் அதிகமான சம்பளத்தை இழக்கச் செய்யப்படுதல் போன்ற தண்டனைகள் இடம்பெறுகின்றன.

ஒழுக்கக்கேடு வழக்குகளில் சுமார் 5 சதவீதம், அதாவது 22 வழக்குகள், பணிநீக்கம் அல்லது இராஜினாமா செய்ய உத்தரவிடுதல் போன்ற கடுமையான முடிவுகளுடன் முடிந்துள்ளன.

அதேநேரத்தில், 70 சதவீதத்திற்கும் அதிகமான வழக்குகளில், சிறப்பு பயிற்சி, நெருங்கிய மேற்பார்வை அல்லது தாமதமான பதவி உயர்வு போன்ற சீரமைப்பு மற்றும் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## ட்ரூடோ கேற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவிக்கும் கிராமி விருது வழங்கும் நிகழ்ச்சியில் ட்ரூடோவும் பெர்ரியும் கலந்துகொண்டதைக் காட்டும் புகைப்படங்கள் வெளியாகின.

இருவரும் மேட்சிங்காக கருப்பு நிற உடை அணிந்து ஜோடியாக நிற்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகின.

விடயம் என்னவென்றால், ட்ரூடோவுக்கும் கிராமி விருதுக்கும் சம்பந்தமே கிடையாது. அதேபோல, பெர்ரி ஒரு பாடகிதான் என்றாலும் அவரது பெயர் எந்த பரிசுக்காகவும் பரிந்துரைக்கப்படவும் இல்லை, அவர் நிகழ்ச்சியில் பாடல் எதையும் பாடவும் இல்லை.

அப்படியானால், இந்த ஜோடி எதற்காக கிராமி விருதுகள் வழங்கும் விழாவுக்குச் சென்றது என்று கேட்டால், அவர்கள் இருவரும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவே இல்லை என்ற உண்மை தெரிய வந்துள்ளது.

அதாவது, எல்லாம் இந்த AI புகைப்படங்கள் உருவாக்குபவர்களின் கைவண்ணம்தான்.

செயற்கை நுண்ணறிவு மூலம் இப்படி ட்ரூடோவும், பெர்ரியும் கிராமி விருதுகள் வழங்கும் விழாவில் பங்கேற்றதுபோல் புகைப்படங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளனர் சிலர். இந்த நிலையில், சமீபத்தில், ட்ரூடோ போல் டான்சிங் என்னும் நடனம் ஆடுவது போலக் கூட ஒரு புகைப்படம் வெளியாகியுள்ளது.

---

## ரஷ்யாவிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவிக்கையில் , "அரசாங்கத்தின் செயல்பாடுகளை நவீனமயமாக்குவதற்கும் ஒட்டுமொத்த செலவுகளைக் குறைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட ஒரு அரசாங்க அளவிலான நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே மாஸ்கோவில் உள்ள குடிவரவு அலுவலகத்தை மூடும் முடிவு எடுக்கப்பட்டது." என்றார்.

"இந்த மறுஆய்வு, உலகெங்கிலும் திட்டங்களை எவ்வாறு மிகவும் நிலையான மற்றும் சீரான முறையில் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்தது" எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ரஷ்யர்கள் இன்னும் ஒன்லைனில் விசாக்களுக்கு விண்ணப்பிக்கலாம். ரஷ்யாவில் செயல்படும் ஆறு விசா விண்ணப்ப மையங்களில் ஒன்றில் தங்கள் பயோமெட்ரிக் தரவுகளை சமர்ப்பிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

எனினும் விசா அங்கீகரிக்கப்பட்டாலும், அதை சேகரிப்பதற்காக அவர்கள் நாட்டிற்கு வெளியே உள்ள மையங்களுக்குப் பயணிக்க வேண்டும்.

ரஷ்யாவின் அண்டை நாடுகளான ஆர்மீனியா, ஜார்ஜியா மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகளில் கனேடிய விசா செயலாக்க மையங்கள் உள்ளன. ஆனால், பெலாரஸில் கனேடிய மையங்கள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# மோசமான குற்றவாளி என தெரிந்தும் எப்ஸ்டீனுக்கு கனடாவுக்குள் அனுமதி

மோசமான குற்றவாளி என தெரிந்தும் அமெரிக்க கோடீஸ்வரரான ஜெஃப்ரி எப்ஸ்டீனுக்கு கனடாவுக்குள் நுழைய அனுமதியளிக்கப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், குற்றச்செயலில் ஈடுபட்டவர் என தெரிந்தும் எப்ஸ்டீனை கனடாவுக்குள் அனுமதித்தது ஏன் என கேள்வி எழுந்துள்ளது.

வேலை தருவதாக வாக்களித்து, பருவம் எய்தாத சிறுமிகள் முதல், இளம்பெண்கள் வரை, ஏராளமானோரை துஷ்ப்பிரயோகம் செய்து, அந்தப் பெண்களை தனது நண்பர்கள் பலருக்கும் விருந்தாக்கியவர் அமெரிக்கக் கோடீஸ்வரரான ஜெஃப்ரி எப்ஸ்டீன்.





சமீபத்தில், அமெரிக்க நீதித்துறை வெளியிட்ட எப்ஸ்டீன் கோப்புகள் என்னும் ஆவணங்கள், பல்வேறு நாடுகளின் அரசியலிலும் புயலைக் கிளப்பிவருகின்றன.

அந்த ஆவணங்களில் ஒன்றில், 2014ஆம் ஆண்டு எப்ஸ்டீன் கனடாவுக்கு பயணித்த விடயம் குறித்த தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு சிறுமி ஒருவரை துஷ்பிரயோம் செய்தமை உட்பட இரண்டு குற்றச்சாட்டுகளின் பேரில் எப்ஸ்டீனுக்கு 18 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அப்படி மோசமான குற்றச்செயலில் ஈடுபட்டு தண்டிக்கபபட்ட ஒருவர், சட்டப்படி கனடாவுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்.

ஆனால், 2014ஆம் ஆண்டு, எப்ஸ்டீன் கனடா வந்தமைக்கான ஆதாரங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இப்படி ஒரு மோசமான குற்றவாளி கனடாவுக்குள் எப்படி அனுமதிக்கப்பட்டார் என கேள்வி எழுந்துள்ளது.

கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பிடம் இது குறித்து கேள்வி எழுப்பிய போது, அந்த அமைப்பு, கனடா எல்லை பாதுகாப்பு முகவரகத்தை கைகாட்டியுள்ளது.

கனடா எல்லை பாதுகாப்பு முகவரகமே கேள்விக்கு பதிலளிக்க மறுக்கிறது.

இதற்கிடையில், அந்த காலகட்டத்தில், கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சராக இருந்த கிறிஸ் அலெக்சாண்டர், எப்ஸ்டீன் கனடா வந்தமை குறித்து தனக்குத் தெரியாது என்றும், அப்படி அவர் கனடாவுக்குள் அனுமதிக்கப்பட்டிருப்பாரானால், அது புலம்பெயர்தல் அமுலாக்கத்தில் மிக முக்கிய தவறாகும் என்றும் கூறியுள்ளார்.